Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 73/2022**

**2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | உடுமலைபேட்டை |
| த/பெ | - | மாறன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | ஜல்லிபட்டி | வயது | - | 55 |
| சாதி | - | - | | | |

**21.09.2023**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் ஜல்லிபட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நானும் ரவியும் வந்தோம். 21-05-2020 அன்று நினைக்கிறேன். ரெஜியின் தலநார்எஸ்டேட்டிற்கு வந்தோம். அவரது எஸ்டேட்டை நான் 5 ஏக்கரும், ரவி 10 ஏக்கரும் குத்தகைக்கு எடுத்து இருந்தோம். அங்கு ஒரு செட்டை ரவி போட்டிருந்தார்.

2. நாங்கள் வந்து பார்த்தபோது பூட்டு உடைந்து இருந்தது. உள்ளே போய் பார்த்தபோது இரும்பு கட்டில்-4 மெத்தை-4, 5h.p. மோட்டார்-1, பிவிசி பைப், வீட்டுக்கு அடிக்கும் பெயிண்ட் டப்பா, சமையல் சாமான்கள், குக்கர், கேஸ் அடுப்பு ஆகியவைகள் திருடு போயிருந்தது. நாங்கள் போய் காடம்பாறை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் நாங்கள் கொடுத்ததுதான் அதில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் (நகல்) அ.சா.ஆ.2 ஆகும், புகார் நகல் என்பதால் எதிரிகள் தரப்பின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

4. திருடு போன பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் இரும்பு கட்டில்கள்-2 பிளாஸ்டிக் சேர் புளு கலர்-2, பெட்-1, டாட்டா கேஸ் கம்பெனி சிலிண்டர்-1 , கேஸ் ஸ்டவ் (பழையது), சுமார் 2 இஞ் பைப் அதன் நீளம் சுமார் 50 அடி பச்சை கலர் ஓஸ் ஆகியவைகள் தான் திருடு போன பொருட்கள் ஆகும். போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:

1. நாங்கள் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை யார் எழுதினார் என்றால் அறிவு வக்கீல் எழுதினார். புகாரில் உள்ளதைதான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியமாக சொல்லுகிறேன். எனக்கு தமிழ் ஓரளவு படிக்கத் தெரியும். புகாரில் எனக்கு எவ்வளவு இடம் பாத்தியப்பட்டது என்பது குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. நாங்கள் அந்த இடத்தில் குத்தகைக்கு இருந்ததை காண்பிக்க எந்த ஆவணங்களையும் புகாருடன் சேர்த்து கொடுக்கவில்லை, போலீசார் விசாரணையிலும் கொடுக்கவில்லை என்றால் இல்லை. என்னுடைய இடத்தில் திருடு போகவில்லை. புகாரில் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொருள் திருடு போயிருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் சாட்சி புகாரை பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்லுகிறார்.

3. நானும், ரவியும் சேர்ந்து கொண்டு 1-வது எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்த வகையில் ரவி இதுநாள் வரையில் எத்தனை புகார்கள் 1-வது எதிரி மற்றும் அவர் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது கொடுத்துள்ளார் என்று தெரியுமா என்றால் 5-க்கும் மேற்பட்ட புகார்கள்.

4. அப்படி கொடுக்கப்பட்ட புகார்களில் நானும் ஒரு சாட்சியாக இருந்துள்ளேன். இதே நீதிமன்றத்தில் ஷாஜி என்பவர் மீது கொடுக்கப்பட்ட சிசி 15/2020 என்ற வழக்கில் சாட்சியம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ.செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.